விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 28 திங்கள் 13.09.2021 மலர் - 2, இதழ் - 160

# ஆளுநர் நியமனமும் கூக்குரலும்


விஜயபாரதம்

முன்னாள் ஐ.பி.எஸ் காவல் துறை அதிகாரி, உளவுத்துறைகளில் பணியாற்றி பல வடகிழக்கு மாநிலத்தில் பல இடதுசாரி பயங்கரவாத குழுக்களை அடக்கியவர், தேசிய துணை பாதுகாப்பு ஆலோசகராக பணியாற்றியவர், தற்போது நாகலாந்தின் ஆளுநராக இருப்பவர் ஆர். என் ரவி. இவரை தமிழக ஆளுநராக மத்திய அரசு சமீபத்தில் நியமித்தது. இதனையடுத்து மருந்து அடித்தவுடன் வெளியே வரும் பூச்சிகளைப்போல தமிழகத்தில் ஆளினர் நியமனத்தை எதிர்த்து ஆங்காங்கே கூக்குரல்கள் கேட்க ஆரம்பித்துள்ளன. இத்தனைக்கும் அவர் இன்னும் பதவியே ஏற்கவில்லை, அவர் என்ன செய்யப்போகிறார் என தெரியவுமில்லை. அதற்குள்ளாகவே இப்படி என்றால், இனி வருங்காலத்தில்...!?

தி.மு.க தலைவரும் தமிழக முதல்வருமான ஸ்டாலின் இந்த நியமனத்தை வெளியே வரவேற்று இருந்தாலும் உள்ளூர அவர் அதனை ரசிக்கவில்லை என்பதையே அவரது கூட்டணியினரின் கதறல்கள் நிரூபிக்கின்றன.

'பொதுவாக ஆளுநர் என்பவர் மத்திய அரசின் கையாளாகத்தான் இருக்கிறார். ஒரு மாநிலத்துக்கு ஆளுநர் தேவையா என்கிற கேள்வி எழுகிறது. ஆளுநர் என்ற மத்திய அரசின் எடுபிடியை வைத்துக்கொண்டு ஒரு மாநில அரசை ஆட்டிப்படைத்து ஆளுவது என்பது பொருத்தமற்றது' என்கிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணன்.

'தமிழகத்திற்கு புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பவர் குறித்து பல்வேறு ஐயங்கள் எழுந்திருக்கிறது. உளவுத் துறையுடன் உறவு வைத்துள்ள ஒருவரை வேண்டுமென்றே தமிழக ஆளுநராக மத்திய அரசு நியமித்துள்ளது. தமிழகத்திற்கு யாரை ஆளுநராக கொண்டுவந்தாலும் தமிழ்நாட்டில் ஆட்சியை கலைக்க கூடிய அளவிற்கு தெம்பும், திராணியும் அவர்களுக்கு கிடையாது' என கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற ரீதியில் குரல் கொடுத்துள்ளார் திருமாவளவன்.

ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரி ஆர்.என்.ரவியை தமிழக ஆளுநராக நியமித்திருப்பதும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஸ்டாலினுக்கு இடையூறு செய்யும் வகையிலேயே ஆர்.என். ரவியை ஆளுநராக மோடி அரசு நியமித்திருக்கிறதோ? என புலம்பி யுள்ளார் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ் அழகிரி.

"பூர்வகுடிகளை ஏமாற்றியாவர் இப்போது தமிழகத்தின் ஆளுநர்!" என கவலையாக தெரிவித்துள்ளார் பூவுலகின் நண்பர்கள் சுந்தர்ராஜன்.

இப்படி இவர்கள் விடும் அறிக்கைகளை பார்த்தால், 'மடியில் கனமில்லை என்றால் வழியில் பயமில்லை' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

# அன்னிய செலாவணி உயர்வு




இந்திய ரிசர்வ் வங்கியின் வாராந்திர புள்ளி விவர நிலவரப்படி கடந்த செப்டம்பர் 3ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் பாரதத்தின் அன்னியச் செலாவணி கையிருப்பு 8.895 பில்லியன் டாலர்கள் உயர்ந்தது. இதனையடுத்து நமது நாட்டின் மொத்த அன்னியச் செலாவணி கையிருப்பு இதுவரை இல்லாத அளவாக 642.453 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. இதற்கிடையில், நாட்டின் தங்க இருப்புக்களின் மதிப்பு 642 மில்லியன் டாலர்கள் அதிகரித்து 38.083 பில்லியன் டாலர்களாக உள்ளது.

# வருமான வரி அவகாசம்




விஜயபாரதம்

2020 - 2021 நிதியாண்டுக்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்வதற்கான அவகாசம் செப்டம்பர் 30ம் தேதியுடன் நிறைவடையும் நிலையில், கொரோனா தாக்கம், புதிய இணையதளத்தில் ஏற்பட்ட சில பிரச்சனைகள் காரணமாக வருமான வரி கணக்கை தாக்கல் செய்பவர்களுக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020 2021 ஆண்டுக்கான வருமான வரி கணக்கை டிசம்பர் 31ம் தேதி வரை தாக்கல் செய்யலாம் என வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

# கோயில் முன்பு துப்பாக்கி



விஜயபாரதம்

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகேயுள்ள ஆளிப்பட்டி மாரியம்மன் கோயில் முன்பு கைத் துப்பாக்கி ஒன்று கிடந்துள்ளது. இதனை கண்ட அப்பகுதியினர் காவல்துறையினருக்கும் வருவாய் துறையினருக்கும் தகவல் அளித்தனர். இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் துப்பாக்கியை கைப்பற்றியதுடன் அப்பகுதி பொதுமக்களிடம் இது குறித்தும் விசாரணை நடத்தினர். திருச்சி துப்பாக்கி பராமரிப்பு பிரிவு காவல்துறையினர் ஆய்வு செய்த பிறகுதான் கைத்துப்பாக்கியின் ரகம் குறித்து தெரியவரும் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# ஆகாய மார்க்கமாக மருந்து



விஜயபாரதம்

மத்திய அரசின் நிதி ஆயோக் மற்றும் ஹெல்த்நெட் குளோபல்' ஆகிய அமைப்புகளுடன் சேர்ந்து அவசர தேவைக்கு ஆகாய மார்க்கமாக மருந்து பொருட்கள் என்ற திட்டத்தை துவக்கி உள்ளது. மத்திய விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா, தெலங்கானா மாநில அமைச்சர் கே.டி ராமராவ் ஆகியோர் தெலுங்கானா மாநிலம் விகாராபாத்தில் இதனை துவக்கி வைத்தனர். இத்திட்டத்தின் வாயிலாக, 'டிரோன்' எனப்படும் ஆளில்லா குட்டி விமானம் வாயிலாக போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு தடுப்பூசி, மருந்துகள் போன்றவற்றை கொண்டு சேர்க்க முடியும். மருத்துவத் துறை, தொழில் நுட்பத் துறை, மத்திய மாநில அரசுகள் இப்பணியை மூன்று மாதங்களுக்கு ஆய்வு செய்யும். பின் இத்திட்டம் நாடு முழுதும் விரிவுபடுத்தப்படும்.

# ரயில்வே ஊழியர் கைது

ரயில்வே தபால் சேவையில் பணிபுரியும் பல்பணி ஊழியரான பாரத் பவ்ரி என்ற நபர், நமது இந்திய ராணுவத்தின் சில ரகசிய ஆவணங்களை புகைப்படம் எடுத்து பாகிஸ்தானின் உளவுத்துறைக்கு வாட்ஸ்அப்பில் அனுப்பியுள்ளார். இதனை ராணுவ புலனாய்வு பிரிவும் ராஜஸ்தான் காவல்துறையின் உளவுத்துறையும் கண்டறிந்து அவரை ஜெய்ப்பூரில் கைது செய்தது. விசாரணையில் பாகிஸ்தானின் உளவுத்துறையினர், இவரிடம் ஒரு பெண்ணை போல பேசி காதலில் விழவைத்து ராணுவ ரகசியங்களை தெரிந்து கொண்டதாக தெரியவந்துள்ளது.



விஜயபாரதம்

# விமானப்படையுடன் ஐ.ஐ.டி ஒப்பந்தம்



விஜயபாரதம்

இந்திய விமானப்படையும் ஐ.ஐ.டி கான்பூர் கல்வி நிறுவனமும் இணைந்து விமானப்படையின் ஏரோஸ்பேஸ் தொழில்நுட்பத்தில் பல்வேறு பிரிவு களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை (ஆர் & டி) ஊக்குவிக்க ஒன்றாக செயல் பட ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. ஏர் வைஸ் மார்ஷல் ஹர்ஜிந்தர் சிங் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

# போர்க்கப்பல்கள் ஏற்றுமதி



பாரதத்தின் முன்னனி கப்பல் கட்டும் நிறுவனமான 'கார்டன் ரீச்' (ஜி.ஆர்.எஸ்.இ) கப்பல் கட்டும் நிறுவனம் தற்போது பிரான்சின் 'நேவல் குரூப்' நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதன்படி இந்த இரு நிருவனங்களும் இணைந்து போர்க்கப்பல்களை தயாரித்தும் மேம்படுத்தியும் நட்பு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உள்ளன. தற்போது பாதுகாப்பு அமைச்சக நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஜி.ஆர்.எஸ்.இ தளம் நமது இந்திய கடற்படை, கடலோர காவல் படைக்கு போர்க் கப்பல்களை தயாரித்து வழங்கி வருகிறது. இந்த புதிய ஒப்பந்தம் மூலமாக இனி உலக நாடுகளின் கடற்படைக்கு ஏற்ற போர்க்கப்பல்களை தயாரித்து இரு நிறுவனங்களும் வழங்கும். ஜி.ஆர்.எஸ்.இ இதுவரை பாரதம், வெளிநாட்டு படைகளுக்காக 100க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்களை கட்டியுள்ளது. இந்த இரு நிறுவனங்களும் இணைந்து கப்பல் கட்டும் துறையில் தமக்கு இருக்கும் படிப்பினைகள், தொழில்நுட்பங்கள் மூலம் உலகத்தரம் வாய்ந்த போர்க்கப்பல்களை தயாரித்து வழங்க உள்ளன.

# பழமையான கோயில் கண்டுபிடிப்பு



விஜயபாரதம்

உத்தரபிரதேசத்தின் எட்டா மாவட்டத் தில் உள்ள பில்சார் கிராமத்தில் குப்த பேரரசின் ஆட்சிகால பழங்கால கோயிலின் பகுதிகளை இந்திய தொல் பொருள் ஆய்வுத்துறையினர் (ஏ.எஸ்.ஐ) கண்டுபிடித்துள்ளனர். ஒரே திசையை நோக்கிய இரண்டு செவ்வக அலங்கார தூண்களைக் கொண்ட படிக்கட்டுகள், அவற்றின் முன் பக்கத்தில் யாகங்கள், கணங்கள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அதில் உள்ள சங்கலிபி எழுத்துக்களில் அப்பகுதி 'ஸ்ரீ மகேந்திராதிட்டி' என்று பொறிக்கப்பட்டு இருந்தது. இதனை ஆய்வு செய்தபோது இக்கோயில் குப்த ஆட்சியாளர் குமரகுப்தா 1ன் காலத்தைச் சேர்ந்தது என்பது உறுதி செய்யப்பட்டது. குப்த ஆட்சியாளர் குமரகுப்தா 1, ஐந்தாம் நூற்றாண்டில் வட மத்திய பாரதத்தை ஆட்சி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது..

# தார் பாலைவன பாதுகாப்பு



விஜயபாரதம்

இறைவன் படைப்பில் அனைத்திற்கும் ஒரு காரணம் உள்ளது. அதேபோல நாம் ஒன்றுக்கும் உதவாது என கருதும் பாலைவனப் பகுதியும் இயற்கையின் படைப்பில் ஒரு அங்கம்தான். நிலப்பரப்பு, கால நிலை உள்ளிட்டவற்றில் தினமும் பெரிய அளவில் மாறுபாடுகள், குறைந்த மழை, தீவிர வறட்சி, தீவிர புற ஊதா கதிர்வீச்சு கொண்ட பாலைவனங்கள் பூமியின்காலநிலையைஉறுதிப்படுத்துவதில்முய்க்கியத்துவம் வகிக்கிறது. அது மட்டுமில்லாமல் பல்வேறு உயிரினங்களுக்கு வாழ்விடம், கனிமங்கள், மருத்துவ பொருட்கள், தாவரங்கள் என தனக்கென ஒரு தனித்தன்மை கொண்டது பாலைவனங்கள். அவ்வகையில் தற்போது அருகி வரும் தார் பாலைவனத்தை பாதுகாக்கவும் அதனை மீட்டெடுக்கவும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம்ஜோத்பூர் 'டிசைன்' என்ற ஒரு புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது. இதில் பொறியியல், விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவம், விவசாயம், விலங்கியல், வனவியல் போன்ற பல்வேறு துறைகளும் இதில் ஈடுபடுத்தப்படும். இம்முயற்சி, கால நிலை, இயற்கை சூழல் மேம்பாடு, அப்பகுதி மக்களின் வாழ்க்கைமுறை போன்ற பலவற்றிற்கு உதவி செய்யும்.

# கொரோனா பரவலை மறைத்த விஞ்ஞானிகள்



விஜயபாரதம்

கொரோனா பரவல் தொடர்பாக கடந்த பிப்ரவரி 2020ல் லான்செட் என்ற பத்திரிகையில் கட்டுரை ஒன்று வெளியானது. அமெரிக்காவை தளமாகக் கொண்ட 'பீட்டர் டஸ்ஸாக்' என்ற அமைப்பை சேர்ந்த 27 விஞ்ஞானிகள் இக்கட்டுரையை எழுதி இருந்தனர். அக்கட்டுரையில், கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் ஆய்வகத்தில் இருந்து பரவவில்லை என கூறப்பட்டிருந்தது. அப்போது இக்கட்டுரை சில அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஆனால், எப்படி இந்த முடிவுக்கு வந்தார்கள் என்பதை அக்கட்டுரைடையில் அந்த விஞ்ஞானிகள் விளக்கவில்லை. இந்நிலையில் தற்போது பீட்டர் டஸ்ஸாக் அமைப்பு, 2014 முதல் 2019 க்கு இடைப்பட்ட காலத்தில் வெளவால் கொரோனா வைரஸ்கள் குறித்து ஆராய, தேசிய சுகாதார நிறுவனத்தில் இருந்து வுஹான் இன்ஸ்டிடியூட் ஆப் வைராலஜிக்கு 3.4 மில்லியன் டாலர்களை வழங்கியது கண்டறியப்பட்டுள்ளது. இக்கட்டுரையை எழுதிய 27 பேரில் 26 பேர் ஊஹான் ஆய்வகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள். அதனை மறைப்பதற்காகவே இப்படி ஒரு கட்டுரையை எழுதி வெளியிட்டனர் என்பது வெளியாகியுள்ளது என 'தி டெலிகிராப்' பத்திரிகை ஒரு புலனாய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

# வரலாறு என்ன சொல்கிறது?



பாரதிய இதிஹாச சங்கலன சமிதி அமைப்பின் அசாம் பிரிவு, சில நாட்களுக்கு முன்பு "பாரதத்தின் கௌரவ இதிகாசம்" என்ற தலைப்பில் ஒரு விரிவுரைத் தொடரை நடத்தியது. இதில், எழுத்தாளர், கட்டுரையாளர், வரலாற்றாசிரியர், ஐக்கிய நாடுகளுக்கான சுவிட்சர்லாந்தின் ஆலோசகர் என பன்முகத் திறமை வாய்ந்த சுமேதா வர்மா ஓஜா கலந்துகொண்டு, 'கோயில்களைக் கட்டிய ஹிந்து அரசிகள்' என்ற தலைப்பில் உரையாற்றினார். அப்போது அவர், 'மார்க்சிஸ்டுகள், பெண்ணியவாதிகளால் ஆன ஒரு சிறிய குழு நமது வரலாற்றுப் பக்கங்களை சிதைப்பதற்கு காரணமாக இருந்தது. அவர்கள் நமது பாரம்பரியத்திற்கு எதிரான கோட்பாடுகளை வரலாற்றில் புகுத்தினர். மார்க்சிய புரிதல்கள் அனைத்தும் ஆண்களுக்காக உருவாக்கப்பட்டவை, அவை பெண்களுக்கானவை அல்ல, கிறிஸ்தவ இறையியலில் இருந்து கடன் வாங்கப்பட்ட 'ஆணாதிக்கம்' என்ற வார்த்தைக்குள் வடிவமைக்கப்பட்டவை அவை.

பாரத நாகரிகத்தை நாம் வர்ணாசிரம தர்மத்தின் வழியில்தான் பார்க்க வேண்டும். வர்ணம், ஆசிரமம் பற்றிய புதிய உண்மையான புரிதல் நமக்குத் தேவை. நமது தர்ம சாஸ்திரங்களை எழுதிய ரிஷிகள், நான்கு ஆசிரமங்களையும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாகவே வைத்திருந்தனர் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. நமது பாரத கலாச்சாரம், நாகரிகத்தை புரிந்து கொள்ள நமது ராமாயணம், மகாபாரதம், புராணங்களை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். சுலபா, கார்கி, காத்யாயனி, யக்ஞவல்கியர், அவரது இரண்டு மனைவிகளுக்கு இடையிலான உரையாடல்கள், பிரம்மாச்சரிய, சன்யாச ஆசிரமங்கள் உட்பட அனைத்தும் பெண்களுக்கும் சமமாகவே வைக்கப்பட்டிருந்தன என தெளிவுபடுத்துகிறது.

அக்காலத்தில் 64 கலைகளும் ஆண் பெண் இருவருக்கும் சமமாகவே பயிற்றுவிக்கப்பட்டது. இதனால், ராணிகள் கோயில்கள், ஓவியம், சிற்பங்களை வடிவமைத்தனர். ராணிகள் கோயில்களுக்கு நன்கொடையும் அளித்தனர். விருபாக்ஷா கோயில் சாளுக்கிய வம்சத்தின் லோகமஹாதேவியால் கட்டப்பட்டது. ராணி சாந்தி சிரி, நாகார்ஜுன கொண்டாவில் ஒரு புத்தர் கோயிலைக் கட்டினார். ஒடிசாவின் மாதவேஸ்வர் தேவ் கோயில் ராணி மாதவதேவியால் கட்டப்பட்டது. காகதிய வம்சத்தின் ருத்ரம்மா தேவியும் பல கோயில்களை நிர்மாணித்துள்ளார். சோழ அரசி சிம்வியா மகாதேவி பழைய கோயில்களைப் புதுப்பித்ததுடன் புதிய கோயில்களையும் கட்டினார். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் நரசிம்மவர்மனின் ராணியால் கட்டப்பட்டது' என தெரிவித்தார்.

# துடைப்பம்



விஜயபாரதம்

மறைந்த ஒரு பெரிய செல்வந்தரின் மகள் ஓர் ஏழை இளைஞனைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினாள். இது பற்றித் தந்தையிடம் சொன்னாள். எனக்கு வரும் மருமகன் ஏழை என்பதற்காக நான் கவலைப்பட மாட்டேன். அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று பார்ப்போம் என்றார் தந்தை. மறுநாள் தான் திருமணம் செய்து கொள்ள விரும்பும் இளைஞனை மகள் அழைத்து வந்தாள். அவனை ஒரு நாற்காலியில் அமரச் சொன்னார். சிறிது நேரத்தில் வருவதாகச் சொல்லிவிட்டு உள்ளே சென்றார் அந்த செல்வந்தர்.

இளைஞன் குழப்பத்தோடும், பரபரப்போடும் இருந்தான். அவன் பக்கத்தில் சில துடைப்ப குச்சிகள் சிதறிக் கிடந்தன. இளைஞன் ஒரு துடைப்பக் குச்சியை எடுத்து துண்டு துண்டாக உடைத்துக் கீழே போட்டான். பிறகு மற்றொன்று என வரிசையாக ஒவ்வொரு துடைப்பக் குச்சியையும் எடுத்து துண்டு துண்டாக உடைத்துப் போட்டான். சற்று நேரம் கழித்து செல்வந்தர் தன் மகளோடு அங்கே வந்து சேர்ந்தார். இளைஞனை நோக்கி உன்னைச் சோதிப்பதற்க்காகத்தான் இந்த துடைப்பக் குச்சிகளை இங்கே போட்டிருக்கிறேன். இவைகளை எடுத்து அதோ இருக்கும் துடைப்பத்தோடு சொருகி வைத்து இருக்கலாம். அல்லது அவற்றை ஒழுங்காக சேர்த்து பக்கத்தில் வைத்து இருக்கலாம்.

நீயோ இவற்றை துண்டு துண்டாக உடைத்து ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் ஆக்கி விட்டாய். நான் பாடுபட்டு சேர்த்த செல்வம் உன் கையில் கிடைத்தால் என்ன ஆகும்? இந்தக் குச்சிகளை உடைத்து வீணாக்கியதைப் போல, என் செல்வத்தையும் வீணாக செலவு செய்து காலியாக்கி விடுவாய். அதனால் உன்னை நல்ல தகுதி உடையவனாக ஆக்கிக் கொண்ட பிறகு என்னை வந்து சந்தித்துப் பேசு என்றார். இளைஞன் தலை கவிழ்ந்தவாறு எழுந்து சென்றான். செல்வந்தரின் மகளும் தந்தை கூறிய நியாயத்தைப் புரிந்து கொண்டாள்.